Vol.2 No. 2 January 2018 e-ISSN: 2456-5571

# நெடுங்குருதியில் வேம்பர்களின் வாழ்வியல்

**முனைவர் ஜெ.ஜெயசுதன்**
*தொடர்பு அலுவலர்*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்*

தமிழில் புனைக்கதை இலக்கியங்கள் மக்களிடம் பெரும் செல்வாக்கு பெற்றுள்ளன. சமுதாயத்தில் அன்றாடம் நிகழும் வாழ்வியல் பிரச்சனைகளையும், நிகழ்கால நடப்புக்களையும் பதிவு செய்வதால் புதினங்களில் படைப்பாளனுடைய எண்ணப்போக்கும், தனிமனித சமூகம் சார்ந்த பார்வைகளையும் வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு படைப்பாளனும் தான் பிறந்து வளர்ந்த சூழல் சார்ந்த செய்திகளைத் தன்னுடைய படைப்புகளில் கொண்டு வருவது இயல்பு. எஸ்.ராமகிருஷ்ணனின் படைப்புகளில் நெடுங்குருதி புதினம், அவர் வாழ்ந்த மண்சார்ந்த செய்திகளைப் பதிவு செய்கின்றது. மக்களின் வட்டார வாழ்க்கை முறையையும், பழக்கவழக்கங்களையும் மரபுநிலை மாறாமல் நெடுங்குருதி பதிவு செய்கிறது. நெடுங்குருதி புதினத்தில் காணப்படும் வேம்பர்களின் பழக்கவழக்கங்கள், வாழ்வியல் சூழல், சடங்குகள், வழிபாடுகள், நம்பிக்கைகள் போன்ற வேம்பர்களின் வாழ்வியல் கூறுகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

## நெடுங்குருதி - சூழல்

சமூகத்தில் தனிமனித நிலைப்பாடு, தனி மனிதனுக்கும் சமூகத்திற்குமான உறவுகளை நெடுங்குருதி புதினத்தில் பதிவு செய்கிறார். எஸ்.ராமகிருஷ்ணனின் நெடுங்குருதி கதைபெற்ற சூழலைப் பற்றி குறிப்பிடும் போது, “வேம்பலை வரைபடத்தில் இல்லாததொரு ஊர். அது புனைவில் உருவான கிராமம் பால்யத்தில் நான் அறிந்த கிராமங்களின் வெயிலும் மூர்க்கமும் சேர்ந்த மறுவடிவம். வேம்பலையின் மனிதர்கள் வாழ்வை அதன் ஊற்றுக் கண்ணிலே சந்திக்கின்றவர்கள். ஊரைப் பிடித்திருக்கும் துயரம் அவர்களைப் பிறப்பிலேயே மூர்க்கம் கொள்ளச் செய்துவிடுகிறது. தங்கள் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளதற்காக அவர்கள் வெக்கையைப் பொழியும் சூரியனைக் கூட குத்திக் கொல்லுவதற்குத் தயங்காதவர்களாக இருக்கின்றார்கள்”[1] வேம்பலையில் வாழ்ந்த மக்களைக் கோபம் மிகுந்தவர்களாகவும், கொடூரமானவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளார்கள் அதிகார மையத்தின் ஒற்றை தன்மைக்கு உட்படாத வேம்பர்கள் எதையும் எதிர்கொள்பவர்களாகவும், எதிர்ப்புணர்வு கொண்டவர்களாகவும் உள்ளனர் என்று எஸ்.ரா. குறிப்பிடுவதிலிருந்து தனது படைப்பாசிரியர் சொந்த வாழ்வியல் நிகழ்வுகளிலிருந்தும், தன் அனுபவங்களிலிருந்தும் புதினத்தில் கதை களத்தையும், கருவையும் அமைத்துள்ளனர் என்பது புலனாகிறது.

## கிராமிய நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள்

நெடுங்குருதியில் கிராமமக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றைச் சமூகஉணர்வோடு ஆசிரியர் படைத்துள்ளார். நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் சமுதாய தேவைகளின் அடிப்படையில் தோன்றியவை. மனிதனின் தன்னலஉணர்வும், சமுதாயஉணர்வும் நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. இரவு நேரங்களில் நாய் ஊளையிட்டால் ஊரில் துர்மரணம் நிகழும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்ததை, நாகு ஆதிலட்சுமியிடம் பேசும்போது “நேற்று ராத்திரி ஒருநாய் ஊளை யிட்டுச்சக்கா.............கேட்டாயா யாரோசாகப் போறாங்க”[2] என்று குறிப்பிடுவதிலிருந்து அப்பகுதி மக்களின் நம்பிக்கை பற்றிய செய்திகளையும் அறியமுடிகிறது, பேய், பிசாசு போன்ற தீயசக்திகள் பற்றிய நம்பிக்கைகள் வேம்பலையில் நிறைந்து உள்ளது. பேய் பிடித்த பெண்களைப் பூசாரி விரட்டி வரும்போது அவர்கள் பாதுகாப்பிற்காக வேப்பமரத்தடியில் அமருவார்கள். பேய் பிடித்தவர்களின் தலைமுடியை வேப்பமரத்தில் ஆணியால் அடித்து பேய் ஓட்டும் முறை வழக்கத்தில் இருந்ததை, “கோடாங்கி அவள் தலைமயிரைக் கொத்தாகஅள்ளி வேம்பில் ஒரு ஆணியை அடித்தான். முன்னதாக வேம்பில் நூற்றுக்கணக்கில் சிறியதும் பெரியதுமாக ஆணிகள் அறையப்பட்டிருந்தன. அதில் கொத்துக்கொத்தாகத் ஆடிக்கொண்டிருப்பதைச் சிறுவர்கள் பயத்தோடு பார்த்துக் கொண்டிருப்பார்கள்”[3] என்று சிறுவர்கள் வேப்பமரத்தைப் பார்த்து பயந்ததையும் “நாகுவின் சிநேகிதன் பாண்டி விரட்டியடிக்கப்பட்ட பேய்கள் வாய் ஓயாமல் பேசிக்கொண்டே இருக்கும் என்று சொன்னான். ஊரில் இதுவரை எந்த ஒரு ஆணையும் பேய் பிடித்து பார்த்ததில்லை. நாகு ஊமைவேம்பைச் சில நேரங்களில் இரவில் கடந்து போகும் போது பார்த்திருக்கிறான்”[4] என்று பேய்களைப் பற்றிய பயம் வேம்பர்களிடம் இருந்ததைக் காணமுடிகிறது. நம்பிக்கைகள் காலம்காலமாக ஒருதலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குச் செல்கிறது. மனிதசமூகம் பிறப்புமுதல் இறப்புவரை பலவித நம்பிக்கைகளைக் கொண்டு இயங்குவதைக் காணலாம்.

## சடங்குகள்

ஒரு சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள் நாட்கள் செல்ல செல்ல சடங்குகளாக மாறுகின்றது. இதனை “குறிப்பிட்ட ஏதேனும் காரணம் பற்றி அல்லது அத்தகு வெளிப்படையான காரணம் புலப்படாது

இயல்பானதாகக் கொள்ளப்பெற்று அல்லது கட்டாயமானதாக வற்புறுத்தப்பெற்று தொன்றுதொட்டுக் கைப்பற்றப்பட்டு வரும் நம்பிக்கைவயப்பட்ட பழக்கவழக்கங்கள் சடங்குகளாக அமைகின்றன"[5] என்கிறார் அன்னிதாமசு. தமிழ் சமுதாய பண்பாட்டில் ஒழுக்க வாழ்விற்கு அடிப்படையாக அமைவது குடும்ப கட்டமைப்பே ஆகும். திருமணம் ஆண் - பெண் இருவரை மட்டுமல்லாமல் இரண்டு குடும்பங்கள் சார்ந்த உறவினர்களிடையேயும் பிணைப்பை ஏற்படுத்தி உறவுகளை வலுக்கச் செய்கிறது. இல்வாழ்கையில் ஈடுபடுபவன் தெய்வந்துள் வைக்கப்படுவான் என்று திருக்குறள் இல்வாழ்க்கையின் மேன்மையைக் கூறுகிறது நெடுங்குருதியில் மாப்பிள்ளைக்குப் பட்டுவேட்டிகட்டி மணப்பெண்ணிற்குப் பட்டுச்சேலை கட்டி தாலி அணிவித்து திருமணம் நடைபெற்ற நிகழ்வை "கல்யாணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகப் வேட்டி வாங்குவதற்காக.......... கோவிலைச் சுற்றி வீதிகளில் கூட்டம் நிரம்பி வழிந்தது"[6] என்று திருமணங்கள் கோவிலில் நடைபெறும் வழக்கத்தையும் பற்றிய செய்திகளை அறியமுடிகிறது. தமிழர் பாரம்பரிய உடையான பட்டுச்சேலை அணிந்து திருமணம் நடைபெற்றதை "உடலுக்குப் பொருந்தாத பட்டுச்சேலையைக் கட்டிக்கொண்டு நடந்துவந்து கொண்டிருந்தாள்"[7] என்றும், மணப்பெண்ணுக்குத் தாலி அணிவிப்பதுவும், பெண் திருமண பயத்தில் இருப்பதையும் குறிப்பிடும் போது "தாலிகட்டி முடித்துக் கோவிலை விட்டு வெளியேயிருந்த பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பதற்காக மல்லிகாவின் கைகளைப் பற்றிக் கொண்டு நடந்தபோது அவள் கைகள் நடுங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது"[8] என்று திருமணப் பெண்ணுக்குத் தாலி அணிவிப்பது பற்றிய தொன்றுதொட்று நடைபெறும் பாரம்பாரிய பழக்கவழக்கங்களை வேம்பர்கள் ஏற்றுக் கொண்டு வாழ்ந்தார்கள் என்பதை அறியமுடிகிறது. மேலும் இறப்பு சம்பவம் நிகழ்ந்த துக்கவீடுகளில் இறந்தவர்களுக்குச் செய்யப்படும் இறுதிசடங்குகள் மொட்டையடிப்பது மற்றும் கொள்ளி வைப்பது போன்ற நிகழ்வுகளை எஸ்.ரா. இராமநாதபுர வட்டார சடங்குகளின் படி புதினத்தில் படைத்துள்ளதை "தலையை மழிச்சுகிடுறீகளா ..........................இல்லை கொள்ளி மட்டும் தானா"[9] போன்ற வரிகளின் மூலமாக சடங்கு முறைகள் பின்பற்றப்படுவது புலப்படுகிறது. சமுதாயத்தில் பின்பற்றப்படும் பழக்கவழக்கங்களைப் பதிவுசெய்து நகரிய வாழ்க்கையின் போலிதன்மைகளை எடுத்துரைக்கின்றார்.

### நம்பிக்கைகள்

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வகையான நம்பிக்கைகளைச் சார்ந்துதான் வாழ்கிறான். வாழ்வில் ஏற்படும் பல நிகழ்ச்சிகளுக்குக் காரணம் காண இயலாதபோது மனமானது சிலவற்றை படைத்து காரணம் கற்பிக்கிறது. இவ்வாறு காரணம் கருதி கற்பித்துக் கொள்பவையே பிற்காலங்களில் நம்பிக்கையாக உருபெருகிறது. வேம்பர்களின் வேப்பமர வழிபாட்டை "சிதைவு, இழப்பு, கொண்டாட்டம் என எல்லாவற்றையும் விழுங்கி விட்டு வேம்பலை மாய சூழலுக்குள் புதைந்து மௌனமாக உறைத்திருக்கிறது. எதிரிகளிடமிருந்து வேம்பர்களைக் காப்பாற்றுவதற்காக இரண்டாகப் பிளந்து அவர்களை விழுங்கியவேப்பமரம் என்ற தொல்பழங்கதை வேம்பர்களின் பூர்வீகத்தினை மாந்திரீகத்துடன் தொடர்புடையதாக ஆக்குகிறது"[10] என்பார் ந.முருகேசபாண்டியன்.

மழைக்காலத்தில் ஊமைவேம்பு பூக்கத்துவங்கிய போது வேம்பில் வழிபாடு செய்து பிசின் எடுத்ததை "கடுஞ்சிவப்பு நிறத்தில் பிசின் ஒழுகத் தொடங்கியது. அப்பிசின் மெதுவாக தரைக்குள் சொட்டி மரமெங்கும் நீண்டிருந்தது. ஆசாரி ஒருவன் தனது குலத்தெய்வத்திற்குப் படையல் செய்வது போல ஊமைவேம்பின் முன்னால் பாக்கும், வெற்றிலையும் வைத்துதான் பிசினை அறுத்து எடுத்துக்கொள்ள சம்மதம் கேட்டுப் பிசினை அறுத்துக்கொண்டு போனான்"[11] என்பதிலிருந்து மரத்தைத் தெய்வமாக கருதி வழிபாடு செய்யும் நம்பிக்கையினை அறியமுடிகிறது. இறந்தவர்களின் ஆவிகள் மனித வாழ்க்கையையும், இயற்கையையும் கட்டுப்படுத்தும் தன்மையைக் கொண்டன என்ற நம்பிக்கை வேம்பர்களிடம் இருந்தது. சென்னம்மா, மாடத்தி ஆகியோரின் ஆவியை வணங்கும் ஆவிவழிபாடு பற்றிய செய்திகள் காணப்படுகின்றது. குலுக்கைக்குள் இருந்த சென்னம்மாவின் உடம்பு பொடியாகி காற்றில் கலந்து ஆவி மட்டும் அலைந்து ஒவ்வொரு வீட்டுச் சன்னலையும் தட்டிக் கொண்டு தெருக்களில் பேசித் திரிவதாக வேம்பர்கள் நம்புகின்றனர். நெடுங்குருதி புதினத்தில் வேம்பலையில் "வேண்டியதைச் சொல்லு தாயி ................. நிறைவேற்றி வைக்கிறோம்"[12] என்று பெண்கள் கை கூப்பி நிற்பதைக் காணும்போது அவர்களின் சமுதாய சூழலே அவர்கள் நம்பிக்கையைத் தீர்மானிக்கிறது என்பதை அறிய முடிகிறது.

### வழிபாடு

தெய்வவழிபாடு வேம்பர்களின் வழிபாட்டினுடைய வளர்ச்சியைக் காட்டுகிறது. சமுதாய சூழலே தெய்வவழிபாட்டைத் தீர்மானிக்கிறது. என்பதை "தெய்வம் என்பது ஒரு சமூக குறியீடு ஆகும். மக்களின் சமூகமனம் தொடர்பான பிரதிபலிப்பே தெய்வம் எனவும் குறிப்பிடலாம். வேட்டைச்சமூகத்தில் மனிதன் இயற்கையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள ஏற்படுத்திக்கொண்ட நம்பிக்கையின் வெளிப்பாடே தெய்வம் என்ற கருத்தாக்கமாகும்"[13] என்று கூறுவர். பழங்குடிகளின் ஆதிதெய்வமாக இருந்த கொற்றவை தெய்வவழிபாடே பாலைநிலத்தில் இருந்தது. மக்கள் தங்களுக்கு நேரும் நோய்களைக் குணப்படுத்துவதற்குத் தெய்வங்களை வணங்குவதும், நேர்த்திகடன் செலுத்துவதாக வேண்டுதல் வைப்பதும்

மரபு. நெடுங்குருதியில் “வெயில்உகந்தஅம்மன் கோவிலை விட்டு வெளியே வந்தாள் நாகுவின் அம்மா பிள்ளைக்கு அம்மை இறங்கி விட்டால் முடி இறக்கி, தான் முதுகில் அலகு குத்தி இருபத்தியோரு அக்கினிச்சட்டி எடுத்து வந்து வெயில் உகந்தாளுக்குக் காணிக்கை செய்வதாக நேர்ச்சை செய்திருந்தாள்”[14] என்ற வரிகளால் தெய்வவழிபாடு பற்றி அறியமுடிகிறது.

எல்லை தெய்வம் என்பது ஊரின் எல்லையில் காவல் செய்யும் தெய்வம். இத்தகைய தெய்வங்கள் ஊரைக் காவல் காத்து தீயசக்திகள், கொடுமையான நோய்கள் ஊருக்குள் வராமல் தடுப்பதாக நம்பப்படுகிறது. எல்லை தெய்வத்தை “இத்தெய்வங்களைக் கருப்புதெய்வங்கள் என்றும் கூறுவர். ஊரினைக் காவல் காக்கும் அய்யனார் எனவும் அழைப்பர். ஊரின் நுழைவு வாயிலில் அமர்ந்த நிலையிலோ, நின்ற நிலையிலோ இத்தெய்வ வடிவங்களை நிறுவுவர்”[15] என்பர். இராமநாதபுரம், விருதுநகர், மதுரை மாவட்டங்களில் பொதுவாக எல்லை தெய்வமாக உள்ள கருப்பசாமி வழிபாட்டை புதின கதைப் போக்கில் கையாண்டுள்ளார். நெடுங்குருதியில் வேம்பர்களின் எல்லைத்தெய்வமான கருப்பசாமி வழிபாட்டை பற்றி குறிப்பிடும் போது “கரையடிக்கருப்பிற்கு ஊட்டுகொடுப்பது என முடிவாகியிருந்தது. கிழக்கே கிடாய்கள் வந்து நின்றன, கரகாட்டக்காரர்களும் மேளக்காரர்களும் இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே வந்து சேர்ந்து விட்டார்கள்”[16] என்று வழிபாட்டைப் படைப்பாசிரியர் கதைக்களமான இராமநாதபுர வட்டாரவழிபாட்டு முறைகளோடு கொண்டு செல்வது இயல்பாக அமைகிறது. நாட்டார் வழிபாடு செய்யும் பூர்வீகமக்களைக் கதைமாந்தர்களாகக் கொண்டது நெடுங்குருதி புதினம். இதனால் “இந்நாவல் நாட்டார் தெய்வங்களின் நாவல். இது குற்றப்பரம்பரையாக ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த மக்களின் வாழ்வை அவர்களின் தெய்வத்தை முன்வைக்கிறது.”[17] என்று கூறுவதிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலில் தெய்வ வழிபாட்டை நெடுங்குருதி புதினம் உணத்துவதை அறிய முடிகிறது.

**ஆய்வு நிறைவுரை**

நெடுங்குருதிபுதினம் வேம்பர்களின் வாழ்வியலையும், நடப்பியல் சமூக நிகழ்வுகளையும் எடுத்துரைக்கிறது. சமூகம் சார்ந்த வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டு படைக்கப்பட்டுள்ளது. கிராம பண்பாட்டின் அடிப்படையான மரபுவழி வாழ்க்கை, தொழில், மரங்கள், கிராம நம்பிக்கைகள் சடங்குகள், பண்பாடு, விழாக்கள், திருமணமுறை போன்றவற்றை கதைகூறும் போக்கில் கொண்டு செல்வது புதினத்தில் வேம்பர்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டுகிறது. சமுதாயத்தைத் துன்புறுத்தும் கூறுகளில் வறுமை முதலிடத்தில் இருப்பதை வேம்பர்களின் வாழ்க்கை காட்டுகிறது. இராமநாதபுரம் வட்டாரமக்களின் வாழ்வியல் பதிவாக, மக்கள் மொழியில் நெடுங்குருதி புதினம் அமைந்துள்ளது. வட்டாரவழக்கு, வட்டாரச்சொற்கூறுகள் முதலான சொல்லாக்க நிலைப்பாடுகள் கதையின் களத்தைக் காட்சிப்படுத்துகிறது. நெடுங்குருதி வெறும் பொழுதுபோக்குப் புதினமாக இல்லாமல் வாழ்க்கையின் நிலையையும், வாழ்க்கையின் பொருளையும் எடுத்துரைக்கிறது. மண்மணம் வீசும் கிராமத்து மக்களின் வாழ்வியலை மரபு மாறாமல் நெடுங்குருதி படம் பிடித்துக் காட்டுகிறது,

**சாண்றென் விளக்கம்**


1. எஸ். ரா. நெருங்குருதி., இரண்டாம்பதிப்பு முன்னுரை.
2. எஸ்.ரா. நெடுங்குருதி.,பக்கம். 24.
3. மேலது., பக்கம். 47 ரூ 48.
4. மேலது., பக்கம். 48.
5. அன்னிதாமசு,காதுகுத்தலும் முடியெடுத்தலும்.,பக்கம். 70.
6. எஸ்.ரா.நெடுங்குருதி.,பக்கம். 286.
7. மேலது., பக்கம். 287.
8. மேலது., பக்கம். 288.
9. மேலது., பக்கம். 133.
10. ந.முருகேசபாண்டியன்., தமிழ்மரபும் தொல்பழங்குடிக்கதைகளும்., பக்கம். 94
11. எஸ்.ரா.நெடுங்குருதி.,பக்கம். 407
12. மேலது., பக்கம். 305.
13. கந்தசுப்பிரமணியன்., சடங்கு வெளியில் சாமியும் சணங்களும்., பக்கம். 44
14. எஸ்.ரா.நெடுங்குருதி., பக்கம். 73.
15. அரு.மருததுரை. நாட்டுப்புறபண்பாட்டுக் கூறுகள் பக்கம்..10.
16. எஸ்.ரா. நெடுங்குருதி., பக்கம் 433.
17. சு.தமிழ்ச்செல்வன்.,எஸ்.ராமகிருஷ்ணனின்புதியபுத் தகங்களின் அறிமுகவிழா.. ப. 51.